<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>

<u>நகர்மன்றக்கூட்டம்</u>

<u>நாள். 29.10.2021 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 10.00 மணி</u>

## <u>நகர்மன்றக்கூட்டம் : நாள். 29.10.2021</u>

**மன்றப்பொருள்—1**

உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் அமைந்துள்ள 1460 எண்ணம் தெருமின்விளக்குகளில் 5 இடங்களில் உள்ள உயர்மின் கோபுர மின்விளக்குகளில் உள்ள 30 எண்ணம் தெருமின் விளக்குகள் LED விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1430 எண்ணம் தெருமின் விளக்குகளை ரூ. 186.00/— இலட்சம் மதிப்பீட்டில் ESCO நிறுவனத்தினர் முலம் LED விளக்குகளாக மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான செலவினத்தொகையினை அரசிடமிருந்து முழு மான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற வேண்டி பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2037/2021/இ1)

**தீர்மானம் எண். 1**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்—2**

இந்நகராட்சி விடுபட்ட பகுதிகளில் கூடுதலாக 100 எண்ணம் புதிய LED மின் விளக்குகள் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தொகையினை அரசிடமிருந்து முழு மான்யமாக பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2037/2021/இ1)

**தீர்மானம் எண். 2**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்—3**

இந்நகராட்சிப் பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை நவம்பர் 2021—ஆம் மாதம் நிகழவிருப்பதால் அனைத்து பணியாளர்களுக்கு ரூ. 10,000/—க்கு (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) முன்பணம் வழங்கவும் மாத ஊதியத்தில் ரூ. 1000/— வீதம் பிடித்தம் செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வருவாய் பிரிவு பணியாளர்களுக்கு ரூ. 8,80,000/— குடிநீர் நிதி செலவினம் ரூ. 30,000/—

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). பண்டிகை காலத்தின் முக்கியத்துவம் குறித்து செலவினம் மேற்கொள்ளலாம்
(ந.க.எண். 1884/பி1/2020)

**தீர்மானம் எண். 3**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–4**

இந்நகராட்சியின் ஆகஸ்ட் 2021 மற்றும் செப்டம்பர் 2021 ஆகிய இரு மாதங்களுக்கு வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிகளுக்கு ஒப்பந்தப்பட்டியல் பிடித்தம் செய்து GST வரியினை உரிய தலைப்பில் இணைய வழியில் GST File செய்தமைக்குரிய செலவினம் ரூ.3,300/– (ரூபாய் மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) RIFA TAX CONSULTANCY நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 4**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–5**

இந்நகராட்சியில் பணிபுரியும் சீருடைப்பணியாளர்களான தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு சீருடைகள் வாங்குவதற்கு செலவினம் மற்றும் தையல்கூலி ஆகிய செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அசு துறை நிறுவனத்தில் கொள்முதல் செய்து கொள்ளவும், உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). சீருடைகள் அவசர அவசியம் கருதி செலவுகள் மேற்கொளள் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 3307/2012/பி2)

**தீர்மானம் எண். 5**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
உசிலம்பட்டி நகராட்சி